கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

பொதுக்கலைமாணி இரண்டாம் வருடப் பரீட்சை

இரண்டாம் அரையாண்டுப் பருவ இறுதிப் பரீட்சை - 2018

**ECN 2226 – இடைநிலைப் பேரினப் பொருளியல்**

**(அனுமதிக்கப்பட்ட காலம்: இரண்டு மணித்தியாலங்கள்)**

எவையேனும் நான்கு **(04)** வினாக்களுக்கு விடைதருக

---

(1). (அ). பொருளாதாரமொன்றின் பிரதான பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை கூறுக. இவற்றுள் எக்குறிக்கோள்களை அடைவது ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிற்கு மிகவும் முக்கியமானது? உமது விடையை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ). பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் பயன்படுத்தக் கூடிய பொருளாதாரக் கொள்கைகளை அவற்றின் கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியிலானதுமான வரையறைகளை கருத்திற் கொண்டு மதிப்பீடு செய்க

(15 புள்ளிகள்)

(2). (அ). பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C(Y) = C_0 + c_1Y$, எனத்தரப்படுகிறது. இங்கு C என்பது நுகர்வுச் செலவீடு மற்றும் Y என்பது தேசிய வருமானம்.

(i) தன்னிச்சையான நுகர்வையும் தூண்டப்பட்ட நுகர்வையும் வேறுபடுத்துக

(6 புள்ளிகள்)

(ii) நுகர்வுக்கும் (C) தேசிய வருமானத்திற்கும் (Y) இடையிலான தொடர்பினை விளக்குக.

(4 புள்ளிகள்)

(iii) MPC +MPS = 1 எனக்காட்டுக இதன் பொருளாதாரக் கருத்தினை விளக்குக.

(5 புள்ளிகள்)

(ஆ). தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரமொன்றின் நுகர்வு மற்றும் வருமான அட்டவணை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| தேசிய வருமானம் (ரூபா. மில்லியன்) | நுகர்வுச் செலவீடு (ரூபா. மில்லியன்) |
|---|---|
| 400 | 300 |
| 500 | 370 |

(i). இப் பொருளாதாரத்தின் நுகர்வுச் சார்பினையும் சேமிப்புச் சார்பினையும் பெறுக.

(4 புள்ளிகள்)

(ii). மேற்படி நுகர்வுச் சார்பையும் சேமிப்புச் சார்பையும் வரைபடத்தில் வரைந்து காட்டுக.

(6 புள்ளிகள்)

(3). கருதுகேள் ரீதியான மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C = C_a + b(Y-T)$ எனத்தரப்படுகிறது. இப் பொருளாதாரத்தின் நுகர்வு மட்டம், முதலீட்டு மட்டம், அரசாங்க செலவீட்டு மட்டம், மாற்றல் கொடுப்பனவுகள் யாவும் மில்லியன் ரூபாவில் அளவிடப்படுகின்றன.

$C = 250$ $MPC = 0.7$ $t = 0.1$
$G = 200$ $I = 150$

(அ). இப் பொருளாதாரத்தின் நுகர்வுச்சார்பினைப் பெறுக.
(2 புள்ளிகள்)

(ஆ). இப் பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டத்தைக் கணிப்பிடுக
(6 புள்ளிகள்)

(இ). முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது?
(2 புள்ளிகள்)

(ஈ). சமநிலைத்தேசிய வருமானத்தின் போது நுகர்வு மற்றும் சேமிப்பு மட்டங்கள் யாவை?
(3 புள்ளிகள்)

(உ). அரசாங்கம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான ஒரு நேரடி மாற்றல் கொடுப்பனவாக (TR) 100 மில்லியன் ரூபாவை செலவிடத்தீர்மானிக்கும் அதேவேளை வருமான வரிவீதத்தை (t), 10 வீதத்திலிருந்து 20 வீதமாக அதிகரிப்பதற்கும் முடிவு செய்வதாகக் கருதுக. புதிய சமநிலை வருமான மட்டத்தைக் கணிப்பிடுக.
(7 புள்ளிகள்)

(ஊ). மேற்படி எல்லா விளைவுகளையும் வரைபடத்தில் காட்டுக.
(5 புள்ளிகள்)

(4). பின்வரும் சமன்பாடுகள் கருதுகேள் ரீதியான திறந்த பொருளாதாரமொன்றை விபரிக்கின்றன. (C, I, G, T, TR, X மற்றும் M ஆகியன மில்லியன் ரூபாவில் அளவிடப்படுகின்றன)

$C=100 + 0.7Y$ $G = 300$ $T = 10$
$I = 150$ $TR = 60$ $X = 75$ $M=50$

(அ). சமநிலை தேசிய வருமான மட்டத்தை கணிப்பிடுக.
(6 புள்ளிகள்)

(ஆ). அரசாங்க செலவீடு 50 மில்லியன் ரூபாவினால் மேலும் அதிகரிக்குமாயின் புதிய சமநிலை வருமான மட்டத்தை கணிப்பிடுக.
(4 புள்ளிகள்)

(இ). இப்பொருளாதாரத்தின் சேமிப்பு மட்டத்தைக் கணிப்பிடுக. சேமிப்பு மட்டம் முதலீட்டு மட்டத்திற்கு சமமாக உள்ளதா? இல்லையாயின் ஏன் என விளக்குக.
(6 புள்ளிகள்)

(ஈ). மேலே உள்ள தொகை வரிக்கு (T) மேலதிகமாக உயர் வருமானம் உழைப்போர் மீது 5% வருமான வரியை (t) அறிமுகப்படுத்த அரசாங்கம் கொள்கைத்தீர்மானமொன்றை எடுக்கிறது. மேற்படி வருமான வரியின் பின்னர் புதிய தேசிய வருமான மட்டம் என்னவாக இருக்கும்?
(5 புள்ளிகள்)

(உ). அரசாங்கம் இறக்குமதிகள் மீது தீர்வையொன்றை விதிக்கத் தீர்மானிக்கிறது. இறக்குமதிகள் மற்றும் தேசிய வருமானத்தின் மீது இக்கொள்கையின் விளைவு யாது? வரைபடமொன்றைப் பயன்படுத்தி சுருக்கமா விளக்குக.
(4 புள்ளிகள்)

(5). பின்வரும் சமன்பாடுகள் ஒரு பொருளாதாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.(C, I, G, T ஆகியவற்றை உள்ளிட்டவை மில்லியன் ரூபாவில் அளவிடப்படுகின்றன).

$C = 200 + 0.75Y$
$T = 100$
$t = 0.1$
$I = 800 - 50i$
$G = 400$
$L = 0.5Y - 25i$
$M/P = 900$

(அ). IS மற்றும் LM வளையிகளை விபரிக்கும் சமன்பாடுகளைப் பெறுக.
(8 புள்ளிகள்)

(ஆ). சமநிலை வட்டி வீதமும் வருமான மட்டமும் யாவை?
(5 புள்ளிகள்)

(இ). அரசாங்கம் வட்டிவீதத்தை (t) 0.10 இலிருந்து 0.15 ஆக அதிகரிக்கவும் பணநிரம்பலை 100 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கவும் தீர்மானிப்பதாகக் கருதுக. புதிய சமநிலை வட்டி வீதமும் வருமான மட்டமும் யாவை?
(7 புள்ளிகள்)

(ஈ). 'MPC' யும் 't' யும் IS வளையியில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துமென விளக்குக.
(5 புள்ளிகள்)

(6). (அ). மூலதனம் பூரண அசைவுள்ள நிலையில் நிலையான நாணய மாற்றுவீத முறைமையின் கீழ், வங்கி ஒதுக்கு வீதத்தைக் குறைக்கும் நடவடிக்கையானது வட்டிவீதத்தின் மீதும் தேசிய வருமானத்தின் மீதும் ஏற்படுத்தும் தாக்கவிளைவு என்னவாக இருக்கும்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ). மூலதனம் பூரண அசைவுள்ள நிலையில் நாணய மாற்றுவீதம் நெகிழ்தன்மை கொண்டதாக இருக்கும் போது (i) வரவு செலவுத்திட்டக் குறைநிலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் (ii) மத்திய வங்கி ஏற்படுத்தும் ஒரு வட்டி வீதக்குறைப்பும் தேசிய வருமானத்தின் மீது ஏற்படுத்தும் தாக்க விளைவினை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.
(15 புள்ளிகள்)

(7). (அ). குறுங்கால வேலையின்மையையும் நீண்டகால வேலையின்மையையும் வேறுபடுத்துக.
(12 புள்ளிகள்)

(ஆ). 'கீழ் உழைப்பு நிலையில் இருப்பதானது வேலையின்மையில் இருப்பதிலிருந்து வேறுபட்டதாகும். உதாரணங்களைப் பயன்படுத்தி மேற்படி கூற்றினை விளக்குக.
(13 புள்ளிகள்)

(8). பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு **(02)** சிறுகுறிப்புகள் எழுதுக.

(அ). கெயின்ஸியப் பேரினப் பொருளியலும் 'பயன்படு கேள்வியும்'
(ஆ). பணவீக்க இடைவெளியும் பணச்சுருக்க இடைவெளியும்
(இ). சேமிப்பு மற்றும் முதலீடு பற்றிய பழம்பொருளியல் வாதிகளின் கருத்தும் கெயின்ஸிய வாதிகளின் கருத்தும்
(ஈ). பணத்திற்கான கேள்வியும் திரவப் பொறிநிலையும்

(ஒவ்வொன்றுக்கும் தலா 12.5 புள்ளிகள்)